ஆவடி சட்டமன்ற தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா மு நாசர் ஆவடி பருத்திபட்டு பசுமைபூங்காவில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வின் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியத்தில் நல்லூர் ஊராட்சியில் உள்ள விஜயநல்லூர், ஆட்டந்தாங்கள், காந்தி நகர் பகுதியில், பொதுமக்களின் பெரும் ஆதரவோடு வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் பரப்புரை மேற்கொண்டார். இந்நிகழ்வில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன், ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்ட திமுக தலைமையிலான மதசார்பற்ற கூட்டணியின் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

சைதாப்பேட்டை 168வது வார்டில் வேட்பாளர் மா.சுப்பிரமணியனுக்கு

இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் வாக்குச் சேகரிப்பு!

சென்னை,ஏப்.8-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் இன்று (7-4-2026) காலை 7 மணிக்கு தொடங்கி 168வது வட்டத்தில் நடந்தே சென்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். தி.மு.கழக வேட்பாளருக்கு ஆதரவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் வாக்குச் சேகரித்தார்.

காலை 7 மணிக்கு பூவிருந்தவல்லி சாலை கங்கையம்மன் கோயில் அருகில் தொடங்கி, கங்கையம்மன் கோயில் தெரு, கற்பகவிநாயகர் கோயில் தெரு, தாண்டவராயன் தெரு, தனபால் தெரு - எதிரில் 4, 3, 5 பிள்ளையார் கோயில் தெருக்களிலும், தாமோதரன் தெரு, காவேரி தெரு, திருக்குமரன் தெரு, அன்பு தெரு, பாரதியார் தெரு, பூந்தமல்லி சாலை திரும்பி முத்துராமலிங்கம் தெரு, சாமந்தி தெரு, கருணை தெரு, நந்திவர்மன் தெரு, பட்டினத்தார் தெரு, காந்தி நகர் தொடர்ச்சி, திருமூலர் தெரு, மதுரை மீனாட்சி தெரு, நக்கீரன் தெரு, அருணகிரி தெரு, தணிகைமலை தெருக்களிலும், அதேபோல் சர்தார் காலனி, ராஜீவ்காந்தி நகர், சத்யா நகர் 1-2 தெருக்கள், சாமிநாதன் தெரு, லாசர் தெரு, லட்சுமி விநாயகர் தெரு, ஆறுமுகம் தெரு, திருமால் தெரு, ராஜாஜி தெரு, காந்திநகர் தொடர்ச்சி, திருஞானசம்பந்தர் தெரு, அருள் பிரகாசம் தெரு, தனக் கோட்டி ராஜா தெரு, பூந்தமல்லி சாலை, அச்சுதன் நகர் 4,3வது குறுக்குத் தெருக்கள், முனுசாமி தெரு, சொர்ணாம்பிக்கை தெரு, கஸ்தூரி பாய் தெரு, சொர்ணாம்பிகை தெருக்கள் வரை நண்பகல் 12.30 மணி வரை வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ஜோதிநகர் முருகன் கோயில் - குறுக்குத் தெரு, பாலாஜி பிளாட்ஸ் திரும்பி 1வது தெரு, திரும்பி கண்ணகி தெரு, விசாலாட்சி 1, 2 தெருக்கள், துரைசாமி தெரு, கணபதி நகர் விரிவு - மெயின்ரோடு, பாலாவிநாயகர் தெரு - மெயின்ரோடு, கணபதி நகர் 1, 2 தெருக்கள், பூந்தமல்லி சாலை, பாலாஜி பிளாட்ஸ், பிள்ளையார் கோயில் தெரு 1, 2 தெருக்கள், பங்களா 2, 3 தெருக்களிலும், பூந்தமல்லி சாலை, நேதாஜி தெரு, பார்த்தசாரதி கோயில் தெரு, ஜவஹர்லால் நேரு சாலை, கலைஞர் தெரு, அவ்வையார் தெரு, அம்பாள் நகர் மெயின் ரோடு, பாரதியார் தெரு, 5வது பிள்ளையார் கோயில் தெரு, 6வது பிள்ளையார் கோயில் தெரு, விவேகானந்தர் தெரு, அகத்தியர் தெரு, திருவள்ளுவர் தெரு, வீரமாமுனிவர் தெரு, கட்டபொம்மன் தெரு, மெயின்ரோடு, கண்ணதாசன்தெரு, சூலைபாண்டியன், பூமகள் தெரு 1 முதல் 5 தெருக்கள் வரை, கணபதி காலனி 1,2 தெருக்களிலும் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது பொதுமக்களிடம் தி.மு. கழக வேட்பாளர் திரு. மா. சுப்பிரமணியன் கடந்த 5 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு செய்த திட்டங்களையும், 7வது முறையாக தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி அமைந்தப் பிறகு செய்ய இருக்கிற திட்டங்களையும், தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ள வாக்குறுதிகளையும் பொதுமக்களிடம் எடுத்துரைத்து, தமக்கு வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அவர், பொதுமக்களிடம், தி.மு. கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருக்கிற திராவிட மாடல் அரசு அடித்தட்டு மக்களின் நலனுக்காவும், அவர்களின் உயர்வுக்காகவும், ஏழை, எளிய மக்களின் பிள்ளைகள் உயர்கல்விக்காகவும், மருத்துவத்துறைக்கும், தொழிற்வளர்ச்சிக்கும் ஏராளமானத் திட்டங்களை கொண்டு வந்து, அது உலகத்திற்கே வழிகாட்டக்கூடிய, வெளிநாடுகள் நமது திராவிட மாடல் அரசின் திட்டமான காலை உணவுத் திட்டத்தை கனடா அரசு செயல்படுத்தியுள்ளதையும், மருத்துவத்துறையில் தமிழ் நாட்டில் கொண்டுவரப் பட்ட இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும்-48 திட்டத்தை உலக நாடுகள் வியந்து பார்க்கின்ற திட்டமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் 767 பங்கேற்புடன், கடந்த மார்ச் 13வரை விபத்தில் பாதிக்கப்பட்ட ஐந்து லட்சத்து 30 ஆயிரத்து 940 பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக இதுவரை அரசு ரூ.514.71 கோடி ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது. இத்திட்டம் உலகிலேயே மிக சிறப்பான மனிதநேயத் திட்டமாக பார்க்கப்படுகிறது. மருத்துவத்துறையில் மகத்தானத் திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் இதுவரை 4 கோடியே 81 லட்சம் பேருக்கு வீட்டிற்கேச் சென்று சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்த திட்டத்திற்கு ஐ.நா. மன்றம் பாராட்டி விருது வழங்கியுள்ளதை பெருமையுடன் தெரிவித்தார்.

காலை உணவுத் திட்டத்தில் 20 லட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இத்திட்டம் இனிவரும் ஆண்டுகளில் எட்டாம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட உள்ளது. அடுத்து நான் முதல்வன் திட்டம், இத்திட்டத்தில் இதுவரை 41 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதில் முக்கியமாக, 3.28 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டு, பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்பு வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இன்னும், இன்னும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. உயர்கல்விப் படிக்கும் பெண்களுக்கு உதவித் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களெல்லாம் தி.மு.க ஆட்சி அமைந்த பிறகு உதவித்தொகைகள் உயர்த்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், சைதைத் தொகுதி மேற்பார்வையாளர் சைதை சாதிக், வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க ம.ஜேக்கப், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க - ஆனந்தன், ம.நீ.ம. - கதிர், எஸ்.டி.பி.ஐ. - அபுதாகிர், பிலால், இ.யூ.மு.லீக் - கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. - சிவா, சி.பி.எம்.-வேல்முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.

எழும்பூர் வடக்கு பகுதி, 78 வது வட்டத்தில் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் சொ.வேலு முன்னிலை வகித்தார். 78 வது வட்ட கழக செயலாளர் சு.மனோகர் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்

தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சென்னை வடக்கு திட்ட மின் கழக தொமுச சார்பில் ஆர்.கே.நகர் சட்ட மன்ற கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் ஜெ.ஜெ.எபிநேசருக்கு 38 அ வட்டத்தில் தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க முன்னாள் மாநில தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் தலைமையில் ,38அ வட்ட செயலாளர் எல்.எஸ்.சுந்தர் முன்னிலையில் தேர்தல் பிரச்சாரம் செய்தனர். இதில் திட்ட பொருளாளர் டி.அருள், துணை தலைவர் ஏ.ராஜேந்திரன், சி.சிவப்பிரகாசம், துணை செயலாளர் மாத்தூர் ஆர்.சங்கர், கு.மாறன்வேதமணி பி.சீனு, கணபதி, ஏழுமலை, வெற்றி த.பேட்டை கிளை சாமு ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டணி கட்சி வேட்பாளர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானாவை ஆதரித்து

வேளச்சேரி மேற்கு பகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரிப்பு!

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு! வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஏப். 08 -

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானாவை ஆதரித்து சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேளச்சேரி மேற்கு பகுதிக்கு உட்பட்ட 175, 175 (அ), 176, 176 (அ), 177, 177 (அ), 178, 178 (அ) ஆகிய வட்டக் கழகங்களில் இன்று (08.04.2026 - புதன்கிழமை) காலை 7 மணி கருணாநிதி தெருவில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரிக்க உள்ளார்.

இதில் கழக கல்வியாளர் அணிச் செயலாளர், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி, சென்னை தெற்கு மாவட்ட கழகப் பொருளாளர் எஸ். பாஸ்கரன் எம்.சி, சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அமைப்பாளர் கழக த.ரமேஷ், சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் த.ஜெகதீசன், கூட்டணிக் கட்சி தோழர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், கே.என்.தாமோதரன், த.பார்த்திபன், ஜி.பி.எஸ். பாலசதீஸ், தே.கோபி, எஸ். முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல், பகுதி இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக இளைஞரணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கே.ஏழுமலை - கோ.சு.மணி - எஸ்.பாஸ்கர் பங்கேற்பு! தியாகராயர்நகர்

130 வது வட்டத்தில் கழக வேட்பாளர் ராஜா அன்பழகன் வாக்கு சேகரிப்பு!

வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் அறிக்கை!

சென்னை, ஏப். 08

தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி கழக ராஜா அன்பழகன் இன்று (08.04.2026 புதன்கிழமை) காலை 7 மணி முதல் 130 வது வட்டத்திற்குட்பட்ட கீழ்கண்ட தெருக்களில் வாக்கு சேகரிக்கிறார்.

அம்மன் கோயில் தெரு, மசூதி தெரு, ஆண்டவர் கோயில் தெரு, தெற்கு மாட வீதி, பிள்ளையார் கோவில் தெரு, வன்னியர் தெரு, ஒற்றை வாடை தெரு, கங்கையம்மன் கோயில் 1, 2 ஆகிய தெருக்கள், ஆண்டவர் நகர் 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகிய தெருக்கள், பரமேஸ்வரி காலனி, ராமமூர்த்தி தெரு, பாலாஜி அவென்யூ, லட்சுமிபுரம், அழகர் நகர் 4 வது குறுக்கு தெரு, கங்கையம்மன் கோயில் 4 வது தெரு, அழகர் நகர் கிழக்கு தெரு, அழகர் நகர் 1, 2, 3, 4, 5, 6 ஆகிய தெருக்கள், அழகிரி நகர் பிரதான சாலை, பக்தவச்சலம் காலனி 1, 2 வது தெருக்கள், கங்கையம்மன் காலனி 1, 2 வது சந்து, வடக்கு மாடவீதி, ஆதிமுல பெருமாள் கோயில் தெரு, வேல்முருகன் காலனி, விவேகானந்தர காலனி ஆகிய தெருக்களின் இரவு 10 மணி வரை வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்கு சேகரிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் கோ.சு.மணி, தூத்துக்குடி எஸ்.ஜோயல், ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர், ஆர்.டி.மதன்குமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில்

ஆர்.கே.நகர் வேட்பாளர் ஜெ.ஜெ.எபிநேசருக்கு வாக்கு சேகரிப்பு!

சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் தலைமையில்!

சென்னை,ஏப்.8-

தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சென்னை வடக்கு திட்ட மின் கழக தொமுச சார்பில் ஆர்.கே.நகர் சட்ட மன்ற கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் ஜெ.ஜெ.எபிநேசருக்கு 38 அ வட்டத்தில் தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க முன்னாள் மாநில தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் தலைமையில் ,38அ வட்ட செயலாளர் எல்.எஸ்.சுந்தர் முன்னிலையில் தேர்தல் பிரச்சாரம் செய்தனர். இதில் திட்ட பொருளாளர் டி.அருள், துணை தலைவர் ஏ.ராஜேந்திரன், சி.சிவப்பிரகாசம், துணை செயலாளர் மாத்தூர் ஆர்.சங்கர், கு.மாறன்வேதமணி பி.சீனு, கணபதி, ஏழுமலை, வெற்றி த.பேட்டை கிளை சாமு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு 07.04.2026 நேற்று அண்ணாநகர் தெற்கு பகுதி, 105அ வட்டத்தில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே.மோகன், எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் ந. ராமலிங்கம், எம்.சி., தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வட்டக்கழக செயலாளர் இரா.பொன்னுரங்கம், தோழமை கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கழக வேட்பாளர் மயிலை த.வேலு ஆதரித்து

மயிலை மேற்கு பகுதி 122வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி வேண்டுகோள்!

சென்னை, ஏப். 8-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியின்

வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 122 வது வட்டத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (08.04.2026) புதன்கிழமை காலை 7:00 மணியளவில் நடைபெறுகிறது.

மயிலை மேற்கு பகுதியை சார்ந்த மாநில,மாவட்ட, பகுதி, நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள் அணிகளின் மாநில,மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA 2, BLC ,BDO, மற்றும் முன்னோடிகள் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு சேகரிக்கும் இடங்கள்: காலை 7:30 மணியளவில் தொடக்கம்: டேங்க் பண்ட் சாலை ஜோதி தோட்டம் அன்பு காலனி, எஸ்.எம்.நகர், 56 முதல் 70 வரை எஸ்.எம்.நகர், ஏ பிளாக் முதல் ஜெ பிளாக் வரை , எஸ்.எம்.நகர் 18 முதல் 38 வரை ரங்கூன் தெரு வோல்டாஸ் பின்புறம் புதிய குடியிருப்பு ஏ,பி பிளாக், ஆலையம்மன் கோவில் தெரு முடிவடைகிறது.

மாலை: 4:30 மணி தொடக்கம் ஆழ்வார்பேட்டை மெயின் தெரு ஆழ்வார்பேட்டை 1,2,3,4வது தெருக்கள் சீத்தம்மாள் விரிவு 3வது மெயின் ரோடு கே.பி.தாசன் சாலை

அருந்ததி நகர் நாகாத்தம்மன் கோயில் திருவள்ளுவர் சாலை ஆழ்வார்பேட்டை மெயின் தெரு, மயிலை மேற்கு பகுதி திமுக தேர்தல் பணிமனை முடிவடைகிறது.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம்.கி.மதி எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி தலைமையில், 124-வது வட்ட பொறுப்பாளர் மா.பா. அன்பு முன்னிலையில் மாவட்டச் செயலாளர் – மயிலாப்பூர் சட்டமன்ற வேட்பாளர் த. வேலு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். மாவட்ட பிரதிநிதி தென்றல் வி.விஜய் சால்வை அணிவித்து வேல் பரிசளித்தார். உடன் சாஸ்தா எஸ்.குமார், ஸ்டார் குமார், காசி, பஞ்சர் முருகன், மனோகர், கார்த்திக், வைதி, இ.உதயா, அஜித், நந்தா, முரளி, ஹரிஷ், லாக் நரசிம்மன், தினேஷ், பிரகாஷ், நந்தா, இளங்கோ, லாக் மூர்த்தி, பட்டினம் பாக்கம் வீரமணி, காசி, தட்சிணாமூர்த்தி, ஆர்.விஜயகுமார், எஸ்.கௌதம் மணி, என். செல்வம், யு.சுரேஷ், மயிலை ஆர்.சிவன் உள்ளிட்டார் பங்கேற்றனர்.

கழக வேட்பாளர் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து, மைலாப்பூர் 125 அ வட்டத்தில் மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் தட்சுணாமூர்த்தி தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. உடன் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மாவட்ட துணை அமைப்பாளர் அயன் ரா.ரமேஷ், பகுதி துணை அமைப்பாளர்கள் கே.ஆர்.குமார், எம்.சிவா, எம்.வேலாயுதம், இரா நாகலிங்கம், ஞான மஞ்சரி சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.